**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(15.03.2023 முதல் 19.03.2023 )**

**அறிக்கைஎண் 021/2023** **தேதி.14.03.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 06°செ முதல் 9°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 10.03.23 முதல் 13.03.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 17 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11-15 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (10.03.2023 முதல் 13.03.2023) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 19.03.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10/03 | 11/03 | 12/03 | 13/03 | தேதி | நாள்-1 15/03 | நாள்-2 16/03 | நாள்-3 17/03 | நாள்-4 18/03 | நாள்-5 19/03 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 1 | 1 |
| 34 | 34 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 34 | 34 | 34 |
| 21 | 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 21 | 21 | 21 |
| 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டர்) | 1 | 2 | 2 | 4 | 4 |
| 75 | 74 | 78 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 80 | 80 | 90 | 90 |
| 17 | 25 | 33 | 27 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 30 | 30 | 40 |
| 13 | 11 | 12 | 15 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 4 | 4 | 4 | 6 |
| 90 | 90 | 70 | 90 | காற்றுவீசும் திசை | 290 | 270 | 290 | 360 | 20 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (15.03.2023 முதல் 19.03.2023)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20

சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-6 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 15-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 16-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 17-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 18-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19-03-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த 5 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் லேசான தூறலுடன் காற்றின் வேகம் 4 - 6 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுபிறது. மேகமூட்டம் கூடுவதனால் வெப்பநிலை கடந்த வாரத்தினை விட சிறிது குறைந்து காணப்படும்.<br>மண் ஈரத்தினைப்பொறுத்து மாலையில் நீர் பாசனம் செய்யவேண்டும். பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் மண் ஈரத்தினைப் பாதுகாக்கலாம். |
| எள் | வளர் பருவம் | தற்போது நிலவும் வானிலையால் எள்ளில் சாறு உறுஞ்சும் வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து ஊடுறுவி பாயும் பூச்சி கொல்லி (அ) 5 சத வேப்பம்கொட்டை சாறு கரைசலைத் தெளிக்கவேண்டும். |
| காய்கறி பயிர்கள் | வளர் பருவம் | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் காய்கறி பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கம் தென்பட்டால் 5 சத வேப்பம்கொட்டை சாறு கரைசலைத் தெளிக்கவேண்டும். |
| முருங்கை | காய்க்கும் பருவம் | வெப்பநிலை உயர்ந்து வருவதால் முருங்கையில் காய் ஈ தாக்குதல் வர வாய்ப்புள்ளது. இதற்கு வேப்ப எண்ணெயை தெளிக்கவும். |
| வாழை | | காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதத்தில் மிகுந்த வேறுபாடு காணப்படுவதால், வாழையில் நடுகுருத்து அழுகல் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனை கட்டுப்படுத்த ப்ளீசிங் பவுடர் 20 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஊற்றவும். பத்து நாட்கள் இடைவெளியில் மற்றொரு முறை பின்பற்றவும். மண்ணில் மருந்து இடும் முன் போதிய மண் ஈரம் இருக்குமாறு பார்த்து கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| தென்னை | | தென்னை மரத்தைச் சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை தக்க முறையில் வேரில் சேமிக்க உதவும்.<br>தென்னை மரங்களில் காண்டா மிருக வண்டு தாக்கம் தென்படுகிறது.<br>இதனை கட்டுப்படுத்த வயது முதிர்ந்த இலைகளை நீக்கிவிட்டு, ஒரு மரத்திற்கு 3 முதல் 4 பூச்சி உருண்டைகளை இடவும். |
| கால்நடைகள் | | வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு தீவனத்துடன் 50 கிராம் டானுவாஸ் ஸ்மார்ட் (**TANUVAS smart**) தாது உப்புக்கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும். மேலும் சுத்தமான குடிநீரை போதிய அளவு வழங்கவும்.<br>கால்நடைகளுக்கு தொடர்ந்து கோமாரி நோய் தடுப்பு ஊசி பக்கத்திலுள்ள கால்நடை மருத்துவமயில் போட்டுக்கொள்ளவும்.<br>வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்படுவதை தடுக்க கோழிப்பண்ணைகளில் இரு ஓரங்களிலும் நனைந்த சாக்கை கட்டிவிடவும். |

## குறுஞ்செய்தி

- தற்போது நிலவும் வானிலையால் எள்ளில் சாறு உறுஞ்சும் வாய்ப்புள்ளது. தேவைப்பட்டால் ஊடுறுவி பாயும் பூச்சி கொல்லி (அ) 5 சத வேப்பம்கொட்டை சாறு கரைசலைத் தெளிக்கவேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**